(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 62.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 22 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

32/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இதுவரை 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்கு நியமனம் செய்கின்றபோது தற்போது அமுலில் உள்ள முறையியல் யாது என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் கான்ஸ்டபிள்களில் சார்ஜன்ட் பதவிக்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள போதிலும், பதவி உயர்வு கிடைக்காத பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு பதவி உயர்வு வழங்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

73/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் வரலாற்று முக்கியத்துவமிக்க ஸ்ரீ மஹாபோதியானது, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற சாம்பலினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலம் ஸ்ரீ மஹாபோதிக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய விசாரணை நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கை சபாபீடத்தில் வைக்கப்படுமா என்பதையும்;

(iv) தற்போது அபாயம் எதுவும் இல்லை எனினும், எதிர்காலத்தில் அபாயகரமான நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதையும்;

(v) இவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில் அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை அவர் குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

129/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i ) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் ஆரம்ப நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் இறுதி பணிப்பாளர் சபை வரை அதன் பணிப்பாளர் சபையிலிருந்த ஆட்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பெற்றுள்ள சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனி ஆரம்பம் தொடக்கம் அடைந்துள்ள நட்டமானது வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியானது கடன் பெற்றுள்ள மற்றும் கடன் செலுத்தவுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் அக்கடன் தொகைகள் யாவை என்பதையும்;

(vi) வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (தனியார்) கம்பனியின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

212/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியிலிருந்து இன்று வரை அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கென வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு வாகனத்தினதும் வகை மற்றும் விலை யாது என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்களுக்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

249/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் லுணுகல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

333/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின், மகாவலி வலயத்திற்கு சொந்தமான கல்னேவ நகரம் இற்றைவரை எவ்வித அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடங்காததொரு நகரமாகும் என்பதையும்;

(ii) மிகவும் சனநெருக்கடிமிக்க நகரமாகிய இந்நகரம் தரமற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கல்னேவ நகரத்தை தரம்வாய்ந்த நகரமாக மாற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

354/ '18

கௌரவ மொஹம்மது நசீர்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா பொலிஸ் நிலையத்தின் 248/177/MOIB ஆம் இலக்க மற்றும் 2017.02.13 ஆம் திகதிய முறைப்பாடு தொடர்பிலான சந்தேக நபருடன், EP-JA-7555 ஆம் இலக்க Toyota Noah வகையிலான மோட்டார் வாகனம், Samsung வகையிலான இரண்டு கையடக்கத் தொலைபேசிகள், Nokia வகையிலான ஒரு கையடக்கத் தொலைபேசி, தேசிய அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிபத்திரங்கள் சில மற்றும் பணம் அடங்கிய பயணப் பொதியொன்று சிவில் பிரசைகள் சிலரினால் 2017.05.01 ஆம் திகதி களுத்துறை மாவட்ட குற்றவியல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்படி சந்தேக நபர் 2017.05.01 ஆம் திகதி முதல் 2017.05.06 ஆம் திகதி வரை பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துமாறு அப்போதைய சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் MLO/MO/OUT/147/17 ஆம் இலக்க 2017.08.29 ஆம் திகதிய கடிதம் மூலம் பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டாளர்களான தரப்பினருக்கு நியாயம் வழங்குவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

362/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போப்பிட்டிய தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

9.

392/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே.— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்துக்கு உரித்தான குறைந்தளவான வசதிகளைக் கொண்ட கஷ்டப் பிரதேசமான பதவி ஸ்ரீபுர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பாடசாலைகளில், மஹிந்தோதய ஆய்வுகூடமொன்று காணப்பட்ட ஒரேயொரு பாடசாலை திருகோணமலை / வடக்கு வலத்தியத்தின் பதவி பளுகஹவங்குவ மகா வித்தியாலயம் என்பதையும்;

(ii) மேற்படி கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மஹிந்தோதய ஆய்வுகூம் 2014.11.08 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீப்பற்றலினால் அழிவடைந்துள்ளது என்பதையும்;

(iii) 2017.09.14 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இதன் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.54 இலட்சம் பணத்தொகையை ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆய்வுகூடம் தீக்கிரையாகி தற்போது சுமார் 3 1/2 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமற் போனமைக்கான காரணங்கள் யாவை;

(ii) புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதிலும், இதுவரையில் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் யாது;

(iii) மேற்படி அ(iii) இல் குறிப்பிடப்பட்ட ஒதுக்கங்களுக்கு என்ன நடந்துள்ளது;

(iv) நவீனமயப்படுத்தல் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

408/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் பணியாற்றியுள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பொலீஸ் பரிசோதகர் பதவி வழங்கப்படுவதாக விடயத்துக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அப்பதவி உயர்வுகள் இதுவரை வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி உத்தியோகத்தர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) எனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அப்பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அப்பதவி உயர்வுகள் வலுவுக்கு வரும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

11.

459/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அண்மையில் கலைக்கப்பட்ட வடமேல் மாகாண முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

531/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2004.12.26 ஆம் திகதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை எதிர்நோக்கிய அம்பாந்தோட்டை நகர சபை வீடுகள் வீதியின் 3/19 ஆம் இலக்கமுடைய வீட்டில் வசித்த திரு. ரீ.என். அமீர் உள்ளிட்ட 68 பேர்களின் காணிகள் 2010.03.17 ஆம் திகதி கரையோரப் பூங்காவொன்றினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக மேலே குறிப்பிட்ட குழுவினருக்கு இற்றைவரை நட்டஈடு செலுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த குழுவினருக்கு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

552/ '19

கௌரவ சி. சிறீதரன்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1000 பாலங்களை நிர்மாணிப்பதற்கான திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அக்கருத்திட்டம் அப்பிரதேச மக்களின் நடவடிக்கைகளுக்குப் பயனற்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாலம் 1000 கருத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலங்கள் பற்றிய விபரங்கள் என்பதையும்;

(ii) கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் யாவர் என்பதையும்;

(iii) இப்பாலம் தொடர்பாக வேறு திட்டமொன்று அப்பிரதேசங்களுக்குப் பொருத்தமானவாறு தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட மாதிரியொன்றின்படி, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டப் பாலங்களின் எண்ணிக்கை என்ன என்பதையும்;

(ii) வேலை முடிவுறுத்தப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iii) இதுவரை நிர்மாணிக்கப்பட்டுவரும் பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்;

(iv) நிர்மாணிக்கப்படவுள்ள பாலங்களின் எண்ணிக்கை என்னவென்பதையும்:

(v) இப்பாலங்களின் ஒப்பந்ததாரர்களின் விபரங்கள் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

683/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகையின் (Wet lease) கீழ் விமானமொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி விமானம் மணித்தியாலமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இவ்வொப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு செல்லுபடியாகும் என்பதையும்;

(iv) இதற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், கிடைத்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குத்தகை முறையின் படி மேலும் விமானங்கள் வழங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், ஒப்பந்தம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

694/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரச கடன் தொகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தலா அரச கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் - 2019 தொடர்பில், தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 பெப்புருவரி 11 ஆம் திகதிய 2110/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பா. 60/ ’19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ பியசேன கமகே

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ கருணாரத்ன பரணவிதான

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ மாவை. சோ. சேனாதிராசா

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ ஏ.டி. பிரேமதாச

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ குமார வெல்கம

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஏ.எச்.எம். பௌஸி

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ நிமல் லான்சா

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் பற்றி ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு,—

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்து, ஆட்களுக்கு சேதமேற்பட்டு, சொத்துக்களும் அழிவடைந்ததன் காரணமாக;

(அ) அத்தகைய தாக்குதல்களுக்கு முன்னர் அது பற்றிய புலனாய்வுத் தகவல்கள், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கு கிடைத்திருந்ததா என்பதையும்;

(ஆ) அத்தகைய தாக்குதல்களை தடுப்பதற்கு மற்றும் / அல்லது அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதியளவில் நடவடிக்கை மேற்கொண்டார்களா என்பதையும்;

(இ) அத்தகைய தாக்குதல்களின் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு மற்றும்/அல்லது குறைப்பதற்கு முடியாமல் போனமைக்குக் காரணமாக அமைந்த அரச பொறிமுறையின் குறைபாடுகள் காணப்பட்டனவா என்பதையும்;

(ஈ) அத்தகைய பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பங்களிப்புச் செய்த வேறு விடயங்களையும்;

(உ) எதிர்காலத்தில் அத்தகைய தாக்குதல்கள் இடம்பெறுவதை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்; மற்றும்

(ஊ) மேற்கூறியவற்றுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான வேறு விடயங்கள் தொடர்பாகவும்;

ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

2. (அ) குழு மற்றும் அதன் தவிசாளர் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்;

   (ஆ) 101 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பன்னிரண்டிற்கு (12) மேற்படாதவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

   (ஆ) எவரேனும் ஆட்கள், ஏதேனும் பத்திரங்கள் அல்லது ஏதேனும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தின் முன் அல்லது குறித்த குழுவின் முன் தோன்றி அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் பத்திரம், புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு எந்தவோர் ஆளுக்கும் பணிப்புரை விடுப்பதற்கும்;

   (இ) குழுவின் தவிசாளர் அல்லது உரிய நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சாட்சிகளை வாய்மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கும் அல்லது வேறு விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

   (ஈ) பாராளுமன்றத்துக்கு வெளியே நாட்டின் ஏதேனும் பகுதிகளில் கூட்டங்களை நடத்துவதற்கும் ;

   (உ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

   (ஊ) பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கூடுவதற்கும்;

   அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* 3.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2112/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1 ),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 35 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 4,800,000,000 இலிருந்து ரூபா. 4,363,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 36 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 470,000,000 இலிருந்து ரூபா. 540,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 545,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 220,000,000 இலிருந்து ரூபா. 230,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 37 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட பொருட்களுக்கான முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 12,000,000 இலிருந்து ரூபா. 27,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,500,000 இலிருந்து ரூபா. 4,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 39,000,000 இலிருந்து ரூபா. 61,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 7.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 38 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "நானாவித முற்பணக் கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 2,500,000 இலிருந்து<br>ரூபா. 530,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 39 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 2,000,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,300,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 40 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 40

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 180,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 150,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 75,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 60,000,000 வரை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 41 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 41

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 350,000,000 இலிருந்து ரூபா. 410,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2018 தொடர்பில், 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுத்தொடர் இலக்கம். 01

2017 அம் ஆண்டின் 30 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00101, 02001, 02501, 14001, 14701, 15501, 16501, 19201, 20101, 20501, 20901, 21501, 22201, 22301, 22401, 22501, 22601, 23101, 24801, 25101, 25801, 25901, 26301, 26601, 27001, 27301, 27701, 28101, 28201, 28401, 28901, 30601, 32401 மற்றும் 33301 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறைகளைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய | நிரல் II இல் ஆகக் கூடிய செலவின் வரையறை (ரூபா) | | நிரல் III இல் ஆகக் குறைந்த பெறுகை வரையறை (ரூபா) | | நிரல் IV இல் ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | அதிமேதகு ஜனாதிபதி | 00101 | | | | | 100,000,000 | 120,000,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | | | 85,000,000 | 95,000,000 | 2 |
| 3. | எல்லை மீள் நிர்ணய ஆணைக்குழு | 02501 | | | 250,000 | 150,000 | | | 3 |
| 4. | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் | 14001 | 15,000,000 | 16,675,000 | | | | | 4 |
| 5. | பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் | 14701 | | | | | 7,000,000 | 7,300,000 | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 15501 | | | | | 35,000,000 | 40,400,000 | 6 |
| 7. | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் | 16501 | 3,000,000 | 3,030,000 | | | | | 7 |
| 8. | சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் | 19201 | | | 108,000,000 | 80,000,000 | | | 8 |
| 9. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 19,400,000 | | | 9 |
| 10. | பொது நம்பிக்கைப் பொறுப்புகள் திணைக்களம் | 20501 | | | 2,200,000 | 2,130,000 | | | 10 |
| 11. | தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம் | 20901 | | | 4,000,000 | 3,400,000 | | | 11 |
| 12. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 21501 | | | 55,000,000 | 48,000,000 | | | 12 |
| 13. | இலங்கைத் தரைப்படை | 22201 | | | 3,028,000,000 | 2,565,000,000 | | | 13 |
| 14. | இலங்கை கடற்படை | 22301 | | | 570,000,000 | 480,000,000 | | | 14 |
| 15. | இலங்கை விமானப்படை | 22401 | | | 460,000,000 | 396,000,000 | | | 15 |
| 16. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,200,000,000 | 1,145,000,000 | | | 16 |
| 17. | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 22601 | | | | | 145,000,000 | 158,000,000 | 17 |
| 18. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 400,000 | 349,133 | | | 18 |
| 19. | மதுவரித் திணைக்களம் | 24801 | | | 37,000,000 | 36,000,000 | | | 19 |
| 20. | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் | 25101 | | | | | 90,000,000 | 90,500,000 | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | | | 65,000,000 | 63,000,000 | | | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், மாத்தளை | 25901 | | | 38,000,000 | 34,000,000 | | | 22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | | | 51,000,000 | 43,000,000 | | | 23 |
| 24. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, வவுனியா | 26601 | | | 13,000,000 | 10,000,000 | | | 24 |
| 25. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | | | 47,000,000 | 45,000,000 | | | 25. |
| 26. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | | | 41,000,000 | 39,500,000 | | | 26. |
| 27. | மாவட்டச் செயலகம், மொணறாகலை | 27701 | | | 34,000,000 | 33,000,000 | | | 27. |
| 28. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | 295,000,000 | 295,320,000 | | | | | 28. |
| 29. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | 260,000,000 | 240,000,000 | 165,000,000 | 145,000,000 | | | 29. |
| 30. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 28401 | | | | | 168,000,000 | 204,000,000 | 30. |
| 31. | ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் | 28901 | | | | | 110,000,000 | 115,000,000 | 31. |
| 32. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | | | | | 1,500,000,000 | 1,520,000,000 | 32. |
| 33. | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | | | 2,200,000 | 2,150,000 | | | 33. |
| 34. | கொம்றோலர் நாயகம் திணைக்களம் | 33301 | | | | | 3,500,000 | 600,000 | 34. |

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

ஒப்பம்/ இரான் விக்ரமரத்ன
பதில் நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 14.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 23.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 27.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

29.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.